**செ.வெ.எண்:29** **நாள்: 15.02.2019**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் KMS 2018-19ஆம் ஆண்டில் சம்பா பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மூன்றாம் கட்டமாக 6 நேரடி நெல் அறுவடை கொள்முதல் நிலையங்கள், அரியலூர் வட்டத்தில் கீழகாவட்டாங்குறிச்சி, விளாகம், இலந்தைக்கூடம், பளிங்காநத்தம், கீழக்கொளத்தூர் மற்றும் கள்ளுர் ஆகிய ஆறு கிராமங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நேரடி கொள்முதல் நிலையங்கள் **18.02.2019** முதல் பயன்பாட்டிற்கு வர உள்ளது.

எனவே, விவசாய பெருமக்கள், அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**